Subscription.

Island: Rs. 100/- year

For Advertisement

Apply to:

The Manager,

'The Morning Star,'

182, First Cross Street

JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89

Established : 1841 : A Christian Weekly: Published Every Friday

Vol:- 150 Jaffna, Friday 23 February 1990 No:- 8

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to

THE EDITOR,

'The Morning Star,'

182, First Cross Street,

JAFFNA.

## The Jaffna Diocesan Council

The Fortythird Annual meeting of the Jaffna Diocesan Council of the Church of South India will be held at Vaddukoddai on the 22nd, 23rd, and 24th of February, 1990. The Bishop of the Diocese the Rt. Rev. D. J. Ambalavanar will deliver his "Charge" to the Diocese on the first day. Two Deacons will be ordained as Presbyters of the Diocese on the Climactic day.

They are:- Rev. Earl. P. Solomons, presently attached to Batticaloa and Rev. P.J. Sooriyakumar, presently attached to Shalomnagar Kilinochchi.

## Wedding

The Marriage was Solemnized between Daniel Athisayathasan son of Mr. & Mrs. J. B. Arumainayagam and Gnaneswary daughter of Mr. & Mrs. N. Satkunasingam on Saturday the 10th of February 1990 at 3.00 p.m. at the C S I Church Navaly. Both, the bridegroom and the bride are from Navaly Church.

The Rev. V. N. Tharmakulasingam the Presbyter of the Navaly Church solemnized the Marriage. assisted by the Rev. Christo T. Roberts. The Rev. S, Gnanarajah of the Methodist Church and a relation of the Couple preached the homily. The Service was followed by a largley attended reception at the parsonage Compound.

## Alumni Association of J.C.

The Alumni Association of Jaffna College had its A G M on Saturday the 3rd of Feb 1990. The programme of the day started with a thanksgiving Service conducted by the Rev. A Jeyakumaran the prerbyter of Vaddukoddai Church. The service was followed by a grand tea party. At 10.30 a.m., all the Alumni Members gathered at the Ottley Hall to felicitate the recently retired Jubilarians of Jaffna College They were Miss. M. S. Elias, Mr. T. Visvanathan and Mr. R. D. Thanabalasingam Miss. M. S. Elias an old girl of J. C. served as a Teacher and later as the Lower School Supervisor Mr. T. Visvanathan, was a Science Teacher and a prominent figure in the N P T A Mr. R, D. Thanabalasingam served as the boarding master and later as the work Supervisor

A Gold Medal was pinned on all the Jubilarians by the president of the association Mr. A. Rajasingam. Miss. P. Gulasingam spoke of Miss. M. S. Elias, Mr. A. A. Paul spoke of Mr. T. Visvanathan and the Rev. Christo. T. Roberts spoke of Mr. R. D. Thanabalasingam

The following were elected as office bearers for the year 1990. Prof. S. Pathmanathan of Jaffna University was elected as the president Mr. A. Kadirgamar, & Mr. A. Rajasingam were elected as vice Presidents. Mr. M. Sithamparanathan was elected as the Secretary and Mr. A. Jeyarajan of Jaffna College was elected as the Treasurer The meeting ended with a fellowship lunch at Bunker Hall.

## Jaffna College Remembers Dr. W. L. Jeyasingam

A Service of Thanksgiving for the life and work of Dr. W.L. Jeyasingam, former President Jaffna College was held on the 9th of February at 9.30 a.m. at the Cathedral Church Vaddukoddai.

The Service was led by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar. The Lessons were read by Mr. W. D. Kulathungam and Miss Mary Elias. The College [illegible]r sang a special Anthem.

Tributes [illegible]he life and work of Dr. Jeyas[illegible]am were paid by teh Rev. Dr. S[illegible]ebanesan Principal of the Coll[illegible]ge and by Mr. C. E. Rajasingam, one of the Directors of the College.

There was a good gathering of Alumini, friends and relations of Dr. Jeyasingam at the Service.

A fellowship Tea in the lower School premises followed the Service.

## International Literacy Year 1990

The U. N. General Assembly has declard 1990 as the "International Literacy year" (I L Y) It is intended to galvanise Governments, International agencies, non - Governmental Organisation and groups working at grassroots level to achieve the goal of Universal literacy by 2000.

So far, inspite of individual and countrywide effort literacy programmes have not been also to keep up with population explosion. In fact the numbers of illiterates, about 900 million or one in four adults, have actually been growing in both Industrialised and non - industrialised Countries. As usual, the poor and women have been the most affected.

The Aims of I L Y are to boost literacy efforts and to put literacy high on devolopment agenda. It will launch a ten - year Campaign by the world Community to promote public awareness of the extent and damage done by illiteracy, to intensfy public partieipation and to strengthen international Co - Operation in achieving a literate World.

J. T. A.

## Christian Theological Seminary. Chunnakam

Applications are invited for the, Preparatory Classes leading to the Diploma of the Seminary and B. Th Cours es of the Serampore University. Minimum qualifications for the Diploma Course are six passes in the G.C.E. (O/L) and for the B.Th Course three passes in one sitting in the G.C.E. (A/L). Other details and application forms may be obtained from the Registrar's office. Applications close on 26th March 1990.

A. Kadirgamar.
Registrar

## St. John the Baptist Church Chundikuli, Jaffna.

Vacancies exist for the following posts :-

i ) CLERK - Salary with EPF & ETF benefits is available.

ii ) SEXTON - Salary with EPF & ETF benefits is available.

Quarters provided in the Church premises.

For further particulars please contact the Vicar or Hony. Secretary to the Parish Council.

## Christian Institute for the Study of Religion & Society

The publication "THE WORD, MEN & MATTERS" in five volumes being a collection of the Rt. Rev. Dr. S. Kulendran formerly Bishop, Jaffna Diocese of the Church of South India will be released at a meeting on Monday the 26th of February., 1990 at 3.00 p. m. in the Ottley Hall, Jaffna College, Vaddukoddai by the Rt. Rev. D. J. Ambalavanar Bishop, J. D. C. S. I.

You are cordially invited to be present.

Christa Seva Ashram
Chunnakam.

A. KADIRGAMAR.
Acting Director CISRS.

## Service of Thanksgiving

A Service of Thanksgiving to God for the Life and work of Dr. William Luther Jeyasingam was held at St. James Church Nallur at 9.30 a.m. on Saturday 13th of January, 1990,

The Rev. Issac Selvaratnam, Vicar of St. James Church, led the Service, assisted by Sevak (Rev.) Sam Alfred of the Christa Seva Ashram, Chunnakam who led the Litany of Thanksgiving.

The Opening Thevaram was sung by Nimalagnani Mahilrajah a niece of Dr. Jeyasingam. The Bible Lessons were read by Siron Rajaratnam, a sister of Dr. Jeyasingam and Sujani Rajadevan, a niece. Two grandchildren in the family also participated actively in the Devotions. Shamlia Indran sang a solo and Sudharshini Danapalan declaimed the passage:-

"Death is only a part of life" (continued on page 4)

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841

மலர் 150 | 23 - 02 - 1990 | இதழ் 8

## இலங்கையிலும் சுதந்திரதினம்.

மாசி 2ம் திகதி தலை நகரில் (சு)தந்திரதின விழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இலங்கை சுதந்திரமடைந்து 42 ஆண்டுகள் ஆகிவிட்டது அதாவது இலங்கை அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று 42 ஆண்டுகளாகிவிட்டது. இவ்வாறுதான் ஆளும் வர்க்கம் 42 வருடங்களாகச் சொல்லி வருகின்றது.

42வருடங்களுக்கு முன் இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்தது.இலங்கை மட்டுமல்ல இந்தியா உட்பட பலநாடுகள் அந்நியரின் ஆட்சியின் கீழ் காலனித்துவ நாடுகளாக இருந்தன. 1802 ஆம் ஆண்டு இலங்கை ஆங்கிலேயரின் முடிக்குரிய நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது

1815 ஆம் ஆண்டு கண்டி இராட்சியம் வீழ்ந்ததுடன் இலங்கை முழுவதும் அந்நியர் வசமானது. அன்று முதல் எமது நாட்டின் ஆட்சியும்,பொருளாதாரமும் அந்நியரிடமே இருந்தது.

1948 பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரப் பிரகடனத்துடன் இலங்கைக்குப் பொறுப்பாட்சி கிடைத்தது. ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்த பல நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் இடம் பெற்ற மக்கள் எழுச்சியே இலங்கை உட்பட பல காலனித்துவ நாடுகளுக்குச் சுதந்திரம் கிடைக்க வழி செய்தது. பெரும்தொகை மக்களை ஒரு சிறிய தொகையினர் ஆட்சி செய்ய முடியாது என்பதை அந்நியர் புரிந்தனர். இதனாலேயே தமது ஆட்சியின் கைப் பிடியைத் தளர்த்தினர். ஆனால் அந்தந்த நாடுகளிலுள்ள ஆட்சியை ஒப்படைத்தனர் வெறுமனே ஆட்சி மாற்றம் ஒன்றே அன்று நடைபெற்றது. அதையே நாம் சுதந்திரம் என்று தூக்கிப்பிடிக்கிறோம். ஆட்சியை மட்டுமே ஒப்படைத்த அந்நியர் பொருளாதாரத்தை தம்வசமே தொடர்ந்தும் வைத்துள்ளனர். சுதந்திரம் என்று நாம் கூறுவதும் கொண்டாடுவதும் வெறுமனே எம்வசம் உள்ள ஆட்சி முறைமையை மட்டுமே. செல்வந்த நாடுகளின் ஏஜென்டுகளில் ஒருவரைத் தெரிவு செய்யும் வாக்களிக்கும் உரிமைமட்டுமே நாம் பெற்றுக் கொண்டோம். முழுமையான சுதந்திரம் என்பது பொருளாதார விடுதலை ஒன்றின் மூலமே சாத்தியம் என்பதை நாம் பின்னரே உணர்ந்தோம். 42ஆண்டுகளாக நாம் நடத்து வந்தபாதையில் சிந்தப்பட்ட இரத்தமே இதற்குச் சான்று. சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து நமது நாடு கண்ட புரட்சிகள், இனக்கலவரங்கள், கிளர்ச்சிகள் எத்தனை எத்தனை: வெறுமனே ஒரு ஆட்சி முறையால் மட்டும் சுதந்திரம் கிடைத்து விடவில்லை என்பதற்கு அவை சான்று.

## ஒய்வு நாள் பாடசாலை இயக்கத்தின் ஆரம்பம்.

ஒய்வு நாள் பாடசாலை இயக்கத்தின் பிதாவாக றொபேட் றெய்க்ஸ் கருதப்படுகிறார். அவர் இங்கிலாந்தில் உள்ள குளொஸ்டர் பகுதியில் ஒரு வாரப்பத்திரிகையின் பிரசுரகர்த்தாவாக இருந்தவர். 1782-ம் ஆண்டில் ஞாயிறு தினங்களில் பெருந்திரளான வறிய-கவனிக்கப்படாத சிறுவர், வீதிகளில் வீணே அலைவதைக் கண்ட அவரின் மனம் கலங்கியது. அந்தக் காலத்தில், ஏழைச் சிறுவர், வாரம் முழுவதும் மிகச் சொற்ப ஊதியத்திற்காக, தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்தனர். ஞாயிறு மட்டும் அவர்களுக்கு விடுமுறைகளாக இருந்தது.

றொபேட் றெய்க்ஸ் வள்ளலாகவும் சீர்திருத்தவாதியாகவும் சிறுவர்களை நேசிப்பவராகவும் விளங்கினார். அலைந்து திரியும் சிறுவரது துஷ்டத்தனங்களைக் கேள்வியுற்ற அவர், ஒரு அறையை வாடகைக்கு அமர்த்தித் தன் சொந்தச் செலவில் அவர்களுக்கு கல்வி கற்பிக்கத் தொடங்கினார். இப்பாடசாலைகள் ஞாயிறு தோறும் நடைபெற்றன. ஏனெனில், மற்றநாள்களில் இச்சிறுவர்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஞாயிறு தோறும் நடைபெற்றபடியால் ஒய்வு நாள் பாடசாலை எனப் பெயர் கொண்டது. இப்பாடசாலைகள், மத போதனையை மட்டும் பூரணமாகக் கொண்டதாக இருக்கவில்லை. வாசிப்பு, எண், எழுத்து ஆகியவற்றைக் கற்பிப்பதும் நோக்கமாய் இருந்தது. றெய்க்ஸ் தனது கைக்காசில் நான்கு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்து வாசிப்பு, எழுத்து, ஒழுக்கம், சமயம் ஆகியவற்றைப் போதிப்பித்தார் ஒவ்வொரு ஞாயிறும் இரு அமர்வுகளில் வகுப்புகள் நடைபெற்றன. ஒன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெற, மற்றது, பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறும்.

ஆரம்பத்தில், மதகுருமாரின் ஒரு பிரிவினர், ''இறைவனின் புனித நாளைச் சேதப்படுத்தும் ஒரு முயற்சிதான் இது'' என எதிர்த்தனர். ஆனால் 1811-ல் றெய்க்ஸ் இறந்தபோது ஒய்வு நாள் பாடசாலைகள் இங்கிலாந்தில் பரவலாக எங்கும் நிறுவப்பட்டிருந்தன.

இங்கிலாந்தில் ஒய்வு நாட் பாடசாலை இயக்கத்திற்கு வேறும் இருவர் தம் பங்களிப்பைச் செய்தனர். உவில்லியம் பொக்ஸ், ஜோண் உவெஸ்லி ஆகிய இருவருமே அவர்களாவார். சிறந்த வியாபாரியாகிய பொக்ஸ், எல்லாரும் திருமறையை வாசிக்க முடியுமானால் ஏற்படக்கூடிய ஆனமீக மாற்றத்தை ஒரு தரிசனமாகக் கண்டார். செல்வாக்குள்ள சில கிறிஸ்தவர்களை அழைத்துத் தனது திட்டத்தைக் கூறினார். 1785 செப்ரெம்பர் ஏழாம் நாள் அவர் ஒய்வு நாள் பாடசாலைச் சபையை, ஒய்வு நாள்பாடசாலைகளை ஒழுங்கமைத்து ஆதரிப்பதற்கெனத் தொடங்கினார். இந்தச்சபை வேதாகம நூல்கள் எழுத்துப்புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கியதோடு ஆசிரியர் சம்பளங்களையும் கொடுத்தது. ஜோண் உவெஸ்லியும் ஒய்வு நாள் பாடசாலையின் பலாபலன்களை மனதிற் கொண்டு, தனது ஆதரவாளர்களை, சிறுவர்களைச் சென்றடைந்து கிறிஸ்துவிற்காக அவர்களைக் காப்பாற்றுங்கள் என ஊக்குவித்தார். ஜோண் உவெஸ்லியின் மிகப் பெரிய பங்களிப்பு, ஒய்வு நாள் பாடசாலை வேலைகளை ஒரு வேதனம் பெறும் தொழில் என்ற நிலையில் இருந்து ஒரு தொண்டான செயலாக மாற்றியமையேயாகும். ஒய்வு நாள் பாடசாலை ஆசிரியர்களே வேதனமின்றிச் சபைகளில் மகோன்னத தொண்டினை ஆற்றி, வருங்காலச் சபைத் தூண்களுக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர் என்பதை யாவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

## செய்திகள்.

### வருடாந்தக் கூட்டம்.

யாழ். தென் இந்தியத் திருமண்டலத்தின் 43-வது வருடாந்தக் கூட்டம் (22-02-1990) வியாழக்கிழமை இன்று காலை 8.00 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் நடத்த ஆராதனையுடன் ஆரம்பமாகியது. இக் கூட்டம் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும். யாழ்ப்பாண ஆதினத்தின் பேராயர் அதி. வண. D. J.அம்பலவாணர் அவர்கள் தலைமையில் இக்கூட்டம் யாழ்ப்பாணக்கல்லூரியில் ஒட்லி மண்டபத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் எல்லாத் திருச்சபைக் குருமாரும் சபா சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

3-ம் நாள் சிறப்பு நிகழ்ச்சியாக காலை 7.30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் கிழக்கு மாகாண பிராந்திய ஊழியன் அருள்சகோதரன் ஏழ் P.சொலமன்ஸ் அவர்களுக்கும் சாலோம்நகர் ஊழியன் அருள் சகோதரன் P.J.சூரி[illegible]மார் அவர்களுக்கும் யாழ். தெ[illegible] இந்தியத் திருமண்டலத்தின் [illegible]ருமாராக, குருத்துவ அருள்[illegible]ழிவு வழிபாடு, பேராயர் அதி. [illegible]ள. D. J. அம்பலவாணர் அவர்[illegible]ளால் நடைபெற இருக்கிறது. இதனைத் தொடர்ந்து. வருடாந்தக்கூட்டம் நடைபெறும்

### சிரமதான பாசறை.

9.2.90 வெள்ளிக் கிழமை மாலை 2. 30 மணிமுதல், மாலை 6. 00 மணிவரை சவுக்கு மரத்திடல் மண்டபத்தில் அமைய இருக்கும் பகல் பராமாரிப்பு நிலையத்திற்கான கட்டிடத்தை சுத்தம் செய்யும் விதத்தில் அரைநாள் சிரமதான பாசறை அருள்திரு ஆ.வே. இயேசுதாசன் தலைமையில் நடைபெற்றது.

காரைநகர் தென் இந்திய திருச்சபை அங்கத்தினர், பெண்கள் ஐக்கியத்தினர், வாலிப அங்கத்தினர், ஒய்வு நாள் பாடசாலை பிள்ளைகள் இப் பாசறையில் கலந்து கொண்டார்கள். அன்றைய தினத்தில் இரண்டு ''மகோகனி'' கன்றுகள்: செல்லன் அ. அடம்ஸ் சிறோசன்,செல்வி அ.அரியரோகினியாலும் வைக்கப்பட்டது, இப் பாசறைக்கு சுமார் 50 பேர் கலந்து கொண்டார்கள்.

## திருமணம்

### திலகா — குமார்

கொழும்பில் வசிப்பவர்களும்,வெள்ளவத்தை மோர்ரோடு மெதடிஸ்த சபையின் அங்கத்தவர்களுமாகிய திரு.திருமதி C .A . சின்னத்தம்பி அவர்களின் மகள் - செல்வி திலகா சின்னத்தம்பிக்கும் , கொழும்பில் வசிப்பவர்களும், வெள்ளவத்தை C . S . I சபையைச் சேர்ந்தோருமாகிய திரு திருமதி. D. C. தம்பி ஐயா அவர்களின் மகன் செல்வன் குமார் தம்பி ஐயாவுக்கும் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தேவாலயத்தில்' அருள்திரு H. R· S ஜெயசந்திரன் அவர்களின் தலைமையில் திருமணம் நிறைவேறியது. திருமண ஆராதனையில் அருள்திரு . T . S பிறேமராசா பங்கெடுத்தார். மணமக்களின் சிறிய தகப்பனார், அருள்திரு. டி .ஆர். அம்பலவாணர் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார்

ஆராதனையின்பின் மாலை 7. 00 மணியளவல் காலி முகாம் ஒட்டலில் அனைவர்க்கு விருந்து உபகரணை நடத்தப்பட்டது.

## மரணம்

### திருமதி சந்திரா குலேந்திரன்

காலஞ்சென்ற திரு . அல்பிறட் யேசுதாசன், திருமதி செல்வமணி யேசுதாசன் ஆகியோரின் அன்பு மகள் திருமதி சந்திரகுமாரி குலேந்திரன் 13-2-90 பிரான்சில் காலமானார்.

இவர் அனுக்கிரக ஜோதி குலேந்திரனின் (முன்னாள் யாழ் -பிராந்திய நட்புறவுச் சங்க அதிபர் ) அன்பு மனைவியும், ஜிகாடன், பிரிஸில்லா ஆகியோரின் அருமைத் தாயாரும், முன்னாள் தென்இந்திய திருச்சபைப் பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்களின் அன்பு மருமகளுமாவர்.

அன்னாரின்இறுதி ஆராதனை, பிரான்ஸ் நாட்டில் நடைபெற்றது வட்டுக் கோட்டையில் அவரை நினைந்து, அவரின் வாழ்க்கைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை 19 - 2 - 90 திங்கள் காலை 8- 00 மணியளவில் வட்டுக் கோட்டை ஆலயத்தில் நடத்தப்பட்டது. அன்று பிற்பகல் 3 - 00 மணிக்கு, செட்டியார் மடம்,வட்டுக்கோட்டையில் அன்னாரின் தாயார். வசிக்கும் இல்லத்தில் அருள்திரு. A ஜெயக்குமாரினால் ஆராதனை நடத்தப்பட்டது. அருள்திரு டி. ஆர். அம்பலவாணர் அவர்கள் இரங்கலுரை வழங்கினார்.

இவரின் பிரிவால் துயருறும் அனைவர்க்கும் எங்கள் அனுதாபங்களை தெரிவிக்கிறோம்.

## புறஞ் சொல்லித் திரிய வேண்டாம்!

தாம் நல்லவர்கள் என்று நினைத்துக் கொண்டு தம் மனச்சான்றை ஏமாற்றித் திரிபவர்கள் தாம் பிறருடைய குறைகளை எடுத்தும் பேசித் திரிவார்கள்.தமது குறைபாடுகளை உணர்பவர்கள் ஒரு போதும் புறங்கூற மாட்டார்கள்.

### அன்பு

அடக்கி ஆளுவதைவிட அன்பினால் ஆளுவதே மேல்.

—(காந்திஜி.)

இரத்தத்தைச் சுரக்கும் என் இதயத்திற்கு அன்பைச் சுரக்க ஆணையிடு இறைவா. -(தாகூர்)

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்; இதனால் அன்பு -இன்னதென்று அறிந்தோம் .

1யோ . 3: 16

சிறு கதை

# அன்பின் கிரியை

இங்கிலாந்திலே ஒரு பெரிய குடும்பம் இருந்தது. தகப்பன் மாத்திரம் வேலைசெய்து குடும்பத்தை நடத்தினார். அவரின் பெயர் யோன். இவர் அதிகாலையில் வேலைக்குப் போய் இரவு 7,8 மணிக்கே வீட்டுக்குத் திரும்புவார். அவர் வேலைத்தலத்திற்கு மோட்டார் வண்டியிலேயே போவார்.

ஒருநாள் இவர் இரவு 8 மணி போல் வீட்டுக்குத் திரும்பும்போது பெரியபுகார் தோன்றியது வழியெல்லாம் புகைபோல் காணப்பட்டுத் தெருக்கள் கொஞ்சமேனும் தெரியவில்லை. என்றாலும் மோட்டார் வண்டியை மெல்ல மெல்லமாக அவர் ஓட்டியபோது, ஒருகற்பாறை இருப்பதை கண்டார் உடனே அவர் ''இனி என்னால்வீட்டுக்குப் போக முடியாது இந்தப்புகார் நீங்க இன்னும் 3,4மணித்தியாலங்கள் செல்லும் எனது வீட்டார் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களே'' என்று யோசித்துகொண்டு மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டுஅந்தப் புகாரையே பார்த்துக்கொண்டிருந்தார். புகாரோ வரவரக்கூடுவதாயிருந்ததேயொழியக் குறையவே இல்லை.

இவர் இப்படித்துக்கமா யோசித்துக் கொண்டிருந்போது, அருகிலிருந்த வீட்டுஜன்னலின்ஊடாக ஒரு சிறியபையனின் முகம் தெரிந்தது. அவனுக்கு 12வயதிருக்கும்' நான் உங்களுக்கு உதவிசெய்யட்டுமா?' என்று கேட்டான்அந்தப் பையன்' 'உமது பெயர் என்ன என்று கேட்டார் யோன், 'எனதுபெயர் கென்றி' என்றான். இச்சிறியபையன் தனக்கு உதவி செய்யவந்தது யோனுக்குக் சிரிப்பாகயிருந்தது. 'இந்தபெரிய புகாருக்கூடாக எப்படி உதவி செய்யப் போகிறீர்' என்றார் அவர். அதற்கு கென்றி என்னால் உதவி செய்ய முடியும், என்னிடம் ஒரு சிறிய வெளிச்சம் இருக்கிறது, என்று தன்னிடமிருந்த வெளிச்சத்தைக் காட்டினான்' அதைக் கண்டதும் அவருக்குச் சிரிப்பே வந்துவிட்டது என்ன மோட்டார் வெளிச்சத்துடன் நான் பாதையைக்கண்டு பிடிக்க முடியாமலிருக்கிறேன், உமது சிறிய வெளிச்சம் எப்படி உதவி செய்யும் என்றார் அவர், அப்பொழுது கென்றி எனக்கு இப்பாதைகள் மிகவும் நன்றாகத் தெரியும். என்வெளிச்சம் சிறிதானாலும் உங்கள் வெளிச்சத்திலும் பார்க்க மிகவும் பிரகாசமானது. ஆகையால் நான் முதலில் உங்களுக்கு முன்னால் போகிறேன். தெருவின் பக்கத்தில் நின்று கொண்டு வெளிச்சத்தைப் பிடிப்பேன், என்னை நீங்கள் நன்றாகக் காணலாம். எனது முதுகுநன்றாகத் தெரியும். உங்கள் வெளிச்சத்தை எனது முதுகை நோக்கி அடித்துக் கொண்டு பின்னே வாருங்கள்என்றான் கென்றி கென்றி முதலில் முன்னேபோய் நின்றான் அவனின் உருவம் யோனுக்குத் தெரிந்தது அவனின் உருவத்தை நோக்கி மிகவும் கஷ்டத்துடன் மோட்டார் வண்டியை ஓட்டிக் கொண்டு போகின்றார், இப்படியே கொஞ்சத் தூரம் சென்றியைப் பின் தொடர்ந்து போகின்றார். 2மைல் தூரம் சென்றிருப்பார்கள். புகாரும் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தல் புகார் முற்றுமாக நீங்கிவிட்டது. உடனே யோன் மோட்டார் வண்டியை நிறுத்தி, கென்றியைப் பார்த்தார் இவ்வளவு கஷ்டப்பட்டு உதவி செய்து களைத்த கென்றிக்கு நன்றி கூறுவதற்கும், ஏதும் உபகாரம் கொடுப்பதற்கும் பார்த்தபோது கென்றியைக்கனவில்லைஒரு வேளை வேறுயாரும் இப்படிக் கஷ்டப்படுவார்களாவென்று பார்த்து உதவி செய்யப் போய்விட்டாராக்கும் என்று யோன் நினைத்து தான் அவனுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று துக்கப்பட்டார்

கென்றி உபகாரத்தையோ. உபகாரவார்த்தைகளையோ காத்திருக்கவில்லை. ஒரு பொழுதும் அறியாதவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து அன்புடன் உதவி செய்தான். கென்றியில் காணப்பட்ட உண்மையானஅன்பையே இயேசு கிறிஸ்து உங்களிடம் காத்திருக்கிறார். அன்பைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன் 1கொரி, 13:4-7 இல் மிகவும் அழகாகக் கூறியுள்ளார் இப்படிப்பட்டஉண்மையான அன்பு எங்களிற் காணப்படும்போது, கிறிஸ்துவின் பிள்ளைகளாய் அன்பின் கிரியைகள் செய்ய எந்நேரமும் ஏவப்படுவோம்.

அ. ஜெயசீலன்

## ஒளிமயமான எதிர்காலம்

மனிதன் தோன்றுகிறான், பருவ காலங்களில் உரியதை உரிய நேரத்தில் செய்து விடுகின்றான். அதிலும் சுயநலம் கொண்டவர்கள் தான் எத்தனை?எத்தனை? நான், எனது, என்ற பதங்களே அவர்களின் வாய் நின்று எழுகின்ற வார்த்தைகள் இவைமாற வேண்டும். எம், எங்கள், என்பவையாக இருக்க வேண்டும். அப்போது தான் உள்ளத்தில் உண்மையான அமைதி தங்கும்.

நாம உலகில் வரும் போது என்ன கொண்டு வந்தோம்? நாம் இறந்து போகும் போது எதைக் கொண்டு போகிறோம்? உரோமைச் சாம்ராஜ்யத்தை ஆண்ட மன்னன் மகா அலெக்ஸ்சாந்தரின் சதையைச் சற்று பாருங்களேன். உரோமை பேரரசிற்கு வித்திட்ட மாமன்னன் மகா அலெக்ஸ்சாந்தர், தன்னுடைய மரணத்தறுவாயில்' அமைச்சர்களை அழைக்கின்றார் அவர் வாயின் நின்றும் வார்த்தைகள் எழுகின்றன ''அமைச்சர்களே! நான் இறந்ததும் என்னுடைகளைப் பெட்டியினுள் வைத்துக் கைகளை வெளியே தொங்க விடுங்கள்,, என்றார் 'அது கேட்ட அமைச்சர்கள் திகைப்புற்று ''ஏன் மன்னா அப்படிச் செய்யவேண்டும்? ''என்று கேட்க அவரோ.' நான் பூமியில் பிறக்கும் போது ஒன்றையும் கொண்வரவில்லை அதுபோல் நான்போகும் போது ஒன்றையும் கொண்டு போகவில்லை என்பதை மக்களுக்கு உணர்த்தவே அப்படிச்செய்யுங்கள் என்றான்.

அந்த மாமன்னன் அப்படிச்செய்யும் போது 'எத்தனை யோபடிகள் குறைவான சாதாரண மக்களாகிய நாம் ஏன் வாஞ்சைப்படவேண்டும்? உன்போல் அயலானை அன்புக்கண்களால் ஒருகணம் நோக்கி ' நண்ப, உண்-குடி-உடு, என்றால் ஓராயிரம் வழிபாடுகளை நிகழ்த்தி விடுவாய் உன் உள்ளத்தில் . இது உண்மையிலு உண்மை, வீணான மண், பொன் பெண்'ஆசைகளை விடுத்து உண்மைச்சகோதர அன்பின் ஊற்றுக்ளாக வாழ எண்ணுவோம் எம்மீது பொகும் அன்பெனும் நீர்ஆறாகப் பெருக் கெடுத்து அண்டத்தை அடையட்டும்' ஒளிமயமான எதிர்காலப் பயிர்கள் ஒவ்வொரு உள்ளத்திலும் துளிர் விடட்டும்.

## ஆங்கிலம் (பேச்சுப் பயிற்சி)

உடுவில் வை. எம். சி. எ. ஸ்தாபனத்தினரால் மேற்கூறிய வகுப்புகள், பாடசாலையிலிருந்து விலகியோருக்கும், தொழில் வாய்ப்பின் நிமித்தம் வெளிநாடு செல்வோருக்காகவும் நடைபெறவுள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- காரியதரிசி. வை. எம். சி. எ. உடுவில்.

## நாட்டுக் கூத்து

வேட்டுக் கூத்துப் பார்க்கின்ற
விந்தையான காலமிதில்
நாட்டுக் கூத்தின் பெருமைதனை
நாலுவரிகள் சொல நினைத்தேன்.

கேட்டுப்பாரும் குறையில்லை
நாட்டுக் கலைக்கோ விலையில்லை
பார்க்கப் பார்க்க அலுப்பில்லை
பகலோடிரவும் முடிந்தாலும்

பகட்டும் சோடினை எழில் மேடை
பறிக்கு கண்ணை ஒயிலாட்டை,
வண்ணத்திரைகள் ஓவியனின்
வளத்தைக் காட்டி வரவேற்கும்
பாட்டும் இடையே வசனநடை
கேட்கும் ரசிகர் மெல்சிலிர்க்கும்
மீட்டும் வீணை இசையோடு
மேளச் சத்தம் மெருகூட்டும்

தாளக்காரன் கையசைய
மேளக்காரன் தலையசையும்
வேஷக்காரர் விளையாட்டை
விடிய விடியப் பார்த்திடலாம்
உண்மைக் கதைகள் ஒரு பக்கம்
புராணக் கதைகள் மறுபக்கம்
நன்மை தரவே நடித்திந்த
நாட்டுக்கூத்தை வளர்த்திடுவோம்

## உங்களுக்கு தெரியுமா?

நிழல் நீரில் படுவதால், உடல் நனைந்து விடுவதில்லை.

-எமிலி ஜோவா.

ஊசியைப் பார்த்துச் சல்லடை சொல்லிற்றாம், உன்னுடைய வாலில் ஓர் ஓட்டை இருக்கிறது என்று.

-இந்தியா.

உலகத்தை வெறுக்கலாம் ஆனால் உலகமின்றி வாழ முடியாது.

--வெல்ஸன் பேர்க்.

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்து, தானும் வருந்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களை, தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில் - பழி அன்று.

-திருக்குறள்-

தீமையை அப்பொழுதே மறந்து விடுவதுதான் அறமாகும்.

—திருக்குறள்

வஞ்சம் தீர்ப்பதன் மூலம் ஒருவன் தன் எதிரிக்குச் சமானமாகி விடுகிறான். ஆனால் அதனைக் கடந்து செல்வதன் மூலம் அவன் எதிரியை விட உயர்ந்தவனாகி விடுகின்றான்.

--செனக்கா.

தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்.

-பாரதி.

## இலங்கை--இந்தியா.

இலங்கையில் இந்தியத் தூதுவராக சுமார் நாலாண்டு காலம் (1985 - 1989) பதவி வகித்தவர் ஜே. என். டிக்ஷிற், தற்போது பாகிஸ்தானில் இந்தியத் தூதுவராக இருக்கிறார். இந்தியாவின் ஐக்கிய பாதுகாப்புப் படை நிலையத்தில் அவர் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

எனது உரையினை நான்கு பகுதிகளாகப் பிரிக்க நான் உத்தேசித்துள்ளேன். முதலாவது பகுதி: நாம் ஏன் இலங்கைக்குச் சென்றோம்? அங்கு நமது ஈடுபாடு எத்தன்மையதாக இருந்தது என்பதாகவும், இரண்டாவது பகுதி நாம் சம்பந்தப்படுவதை நிர்ப்பந்தித்த உட்காரணிகள் யாவை? எனவும், மூன்றாவது பகுதி இந்திய அமைதி காக்கும் படைக்கு ஒப்படைக்கப்பட்ட பணியினை அது எவ்வாறு நிறைவேற்றியது? (இவ்வாறான பணி இந்திய அரசினாலும் மக்களாலும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது இதுவே முதற் தடவை) எனவும், நான்காவது பகுதியில் கடந்த ஆறு தொடக்கம் எட்டு மாதங்களாக இலங்கையில் உருவாகியுள்ள அரசியல் வளர்ச்சிப் போக்கின் ஆரூடமாக அமையும்.

இலங்கையில் தமிழ்த் தீவிரவாதத்தின் வளர்ச்சியை ஒரே வசனத்தில் நான் கூறுவதாயின் இலங்கையில் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்திற்கெதிராக மேற்கொண்ட திட்டமிட்ட, தொடர்ச்சியான ஒருங்கிணைக்கப்பட்ட பாரபட்சங்களின் விளைவேயாகும்.

இலங்கையின் மக்கள் தொகையில் தமிழ் பேசும் மக்கள் 18 வீதத்தினைக் கொண்டவர்கள் என்பதனை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அது மட்டுமன்றி அவர்களின் படிப்பறிவு வீதமும், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வலிமையும் ஏனையவர்களை விடக் கூடுதலாகவுள்ளது.

இலங்கையில் பிரிட்டிஷாருக்கு முற்பட்ட காலனி ஆட்சிக்காலத்திலும் இக்காரணிகள் இவர்களுக்கு சாதகமானதாக இருந்தது. ஆனால் 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழர்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த பாரபட்சக் கொள்கைகளால் ஒரு யுத்த நிலை உருவாகிற்று. தமது அபிலாஷைகளை அடைய வன்முறையைத் தவிர வேறுவழியே இல்லை என்ற நிலைக்கு ஒவ்வொரு தமிழரும் தள்ளப்பட்டனர். இப்பின்னணியிலேயே நாம் எவ்வாறு இதில் சம்பந்தப்பட்டோம் என்பதை மதிப்பிட வேண்டும்.

நாம் இலங்கைக்கு ஏன் சென்றோம்? என்பதற்கான முதற்காரணம் எமது சொந்த ஒற்றுமையைப் பேணிப் பாதுகாப்பதில் நாம் கொண்டுள்ள அக்கறையே ஆகும். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் ஏற்பட்ட எதிர் விளைவுகள் எமது நாட்டைப் பாதித்தன; இந்தியக் குடியரசில் பிரிந்து செல்வதற்கான கோரிக்கை 1960 இன் நடுப்பகுதியில் தமிழ் நாட்டில்தான் முதன் முதலில் ஒலித்தது என்பதனை நாம் மறந்து விடலாகாது.

- வளரும் -

## Dr. J. S. Navaratnam

We regret to record the death which occured at the Jaffna Hospital on the 15th of January 1990 of Dr. Joseph Samuel Navaratnam of Manipay who has been associated actively with the Jaffna Diocese of the Church of South India for well nigh four decades. He was 71 years old at the time of his death.

The Funeral Service took place at his residence at Manipay on 16.1.90 at 3 p.m. The Rev. T. Thevanesan, Presbyter of the Manipay C.S.I. Church conducted the Service, assisted by the Rev. Christo T. Roberts who preached the Sermon. The Rev. D. R. Ambalavanar, paid the tribute.

In the course of his tribute the Rev. Ambalavanar said that Dr. Navaratnam was a Churchman who was deeply involved in the activities of his church (Manipay) and the Jaffna Diocese, of the C. S. I. for many years. He had known him since 1950. Dr. Navaratnam had represented his Church in the Diocesan Council almost since that time and was in the Executive Committee and in several Boards and Standing Committees of the Diocese. At the Diocesan Council Sessions, he always made a valuable contribution to the discussions on many vital issues and may always upheld justice and fair play in all dealings. He had also the gift of keeping the House alive by his wit and humour and by his own characteristic way of Championing even lost causes. In his death, the Rev. Ambalavanar said, the Diocese and Church had lost an indefatigable worker who gave much of his time and energy for the Church and to the community. The Manipay Church owes a debt of gratitude to him for the effort he put in, in connection with its renovation.

The Manipay Church Choir led by Mrs. Rajendram enriched the Service by its songs, accompanied by the piano and the guitar Dr. (Miss) Shantini Navaratnam, the daughter of the deceased, sang a solo, at the conculding stages of the Service. Dr. Navaratnam leaves behind his wife and his only daughter Shantini and a large circle of friends and rela ions.

The remains were interred at the Manipay Church burial grounds.

## Mr. S. V. Kiruparaj

The death occured on 4.1.1990 of Mr. Sinnathamby Victor Kiruparaj (63) of Third Cross Street Jaffna who was wellknown as a writer for the sports Columns of leading news papers in the Country and as a teacher of English for students doing the TOEFL Course in Jaffna. The Funeral Service was held at his residence on 5.1.90.

Mr. Kiruparaj had his early education at Jaffna College joining the teaching profession he served at Highlands, Hatton, Jaffna Central College, and Victoria College, Chulipuram.

In recent times, he has been contributing articles to the Morning Star too, relating mainly to Sports. pleading in his articles for a resuscitation of intrest in school matches played at the Jaffna Esplanade.

The deceased leaves behind besides his wife, Indranee (formerly of Vembadi Girl's School) daughters, Suhanja (Mcleod Hospital, office staff) Ameisha (Chundikuli Girl's College) son Sudharshan (St. Joseph's Catholic Press, Jaffna), a brother, Rev. S. S. Karunairaj and sister Karuna Thomas.

## Dr. Daniel Selvarajah Sanders

Daniel Selvarajah Sanders, beloved husband of Chelvathy, eldest son of the late Mr. David Selvamanickam Sanders, and of Mrs. Harriet Sanders passed away on October 14. 1989 in U S A. Dr. Sanders was Dean of the School of Social Work, University of Illinois at Urbana-Champaign. Illinois, USA. He was formerly Dean of the School of Social Work, University of Hawaii, Honolulu, Hawaii USA.

Dr. Sanders is a brother of Mrs. Selvaranee Kanagarajah (Australia), Mrs. Chandra Ratnarajah (Australia), Dr. S. C. Sanders (U.K.), H. B. Sanders (Australia), son-in-law of the late Nesar and Amirtham Niles, brother - in - Law of Ariam Niles (Australia), Alagan Niles (Sri - Lanka) & Dr. W. R. Niles (U.K.).

Funeral Services were held at the Wesley United Methodist Church, Urbana, Illinois, the Rev. Robert McNamara officiating. Burial was in Mount Hope Cemetery at the University of Illinois, Urbana.

The University Chancellor Morton W. Weir called Dr. Sanders's death "a tragic loss to the University and the Social Work Profession". "Dean Sanders has brought the School of Social Work along very nicely during his deanship. His leadership will be missed", Weir said. "Besides his qualities of leadership and scholarship Dr. Sanders was a wonderful human being, and that's the quality we will miss the most".

While in Sri Lanka Dr. Sanders was Associate Director and Lecturer, Sri Lanka Institute of Social Work, Colombo: Sub-Warden of Brodie H0stel, University of Ceylon, Colombo Chairman/Founder, Coordinating Council of Work - Camps, Colombo: Executive Director and Research Associate, Institute for the Study of Religion and Society, Christa Seva Ashram, Chunnakam.

Mr. Sanders had served as President and Founder of the Inter University Consortium of International Social Development since 1981. In 1988, as president of the organization, he accepted the Messenger of Peace award from the United Nations.

He leaves behind a host of relations, colleagues and friends to bemoan his loss.

C. C. Sanders

# Obituary

The death of Mr. Victor S. Kiruparaj Retired teacher occurred on Thursday the 4th of January 1990. He was the son of the late Mr. and Mrs. S. P. Sinnathamby of 63, Third cross Street, Jaffna.

The Funeral Service took Place on Saturday the 6th at 3.30 p.m. at his Residence. The Service was led by the Rev. K. P. Govindaraj assisted by the Rev. A. W. Jebanesan both of the methodist Church A tribute was paid by Mr. Manickavasagar of Jaffna Central College.

The Deceased Leaves behind his wife Indrani, Two Daughters Suhanya Ameisha and a son Sundharshan.

---

THANKSGIVING...

( continued from page 1 )

Mr. V. Gunaratnam, a Senior Member of the Church of South Erlalai and a classmate in the primary school of Dr. Jeyasingam paid the tribute. In the course of his address, Mr Gunaratnam said that in the galaxy of those who have contributed to the intellectual fertility of the Erlalai soil, Dr. Lurther Jeyasingam held a coveted place. Completing his Primary Education at Erlalai, he joined St. Patrick's College for his Secondary education and then joined the public Service. On the advice of members of his family, he soon gave up public service, and joined the University College as a student from where he graduated and joined the staff of Jaffna College during the Bunker - Selliah era. His "discipline was Geography and soon he was sent to U.S. for further studies. On his return and eventually on Dr. Bunker's retirement, he became the President of Jaffna College.

When the Jaffna University spread its tentacles over the under graduate department at Vaddukoddai, Dr. Jeyasingam's lot was cast into a different arena. On retirement from the University, he took up residence at Nallur and became attached closely to St. James Church, Nallur where for a while he served as Deacon till he decided to leave the Country to join his daughter in U.S.A.

Mr. Gunaratnam stressed the fact that work through the many vicissitudes of his life and work he kept faithful to the Church and the community. His mind was always seething with new ideas for the youth of the land, for the Nation, for education and last not least for the uplift of his own hamlet - Erlalai. The Erlalai South Church building was renovated largely through his help and inspiration. In his death, the Church and community has lost a dynamic leader.

The Rev. Issac Selvaratnam preached the Sermon on the text:- "I have fought a good fight. I have finished my course: I have kept the faith". (Timothy II verse 7). The Rev. Selvaratnam said that the lives of those who "have fought the good fight" are never in vain Their lives continue to inspire others who are involved in the good fight'. He also referred to the contribution which Dr. Luther Jeyasingam had made to St. James Church, Nallur, before he left the Country and while he was still residing in Nallur. He was a source of strength to St. James Church in its varied activities, as a member of several committees and Boards and as a Deacon of the Church.

The Service concluded with Benediction pronounced by Sevak (Rev) Sam Alfred.

The members of the family had a Fellowship Tea at the Parish Hall to all those who attended the Service.

---

# Truth and Love

## The Evelyn Retnam Institute for inter - Cultural Studies

The Evelyn Retnam Institute for Inter - Cultural Studies was established by the late Dr. James T. Retnam in memory of his beloved wife Evelyn, who died in 1964. The buildings of the Institute were constructed by Dr. Retnam with the generous financial assistanee provided by his children. The Institute was established on close proxmity to the University of Jaffna as Dr. Retnam had always felt that University academies should be involved in the Institute's programme of activities.

(to be continued)

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st,Cross Street Jaffna on Friday, 23 Fubruary. 1990 and publis'ed bythe Rev. T. THEVANESAN,182,First Cross Street, Jaffna